DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **கடம்பவள்ளி** |
| Husband Name | : | கண்ணன் |
| Village | : | செல்லப்பனேந்தல் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | கூலி |
| Age | : | 35/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.03.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருப்புவனம் தாலுாக செல்லப்பேனந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர். எனக்கு பார்த்த சாரதி மற்றும் ரிசிநந்தன் என்கிற 2 ஆண்பிள்ளைகள் உள்ளனர். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 6 வருடங்களுக்கு முன்பிருந்தே எனக்கு ஆஜர் எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு எதிரி என்னை தாக்கியதில் நான் திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதிலிருந்து நானும் எதிரியும் பிரிந்து வாழ்ந்து வருகிறேன், மேற்படி சம்பவத்திற்கு பிறகு நான் என் குழந்தைகளுடன் எனது அப்பாவீட்டில் வசித்து வருகிறேன். என் அப்பாவீடும் செல்லப்பனேந்தல் கிராமத்தில் தான் உள்ளது. எதிரியிடம் இருந்து விவகாரத்து கோரி நான் மனு தாக்கல செய்து அந்த மனு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி விவகாரத்து மனுவில் நீதிமன்றத்தால் எனது பிள்ளைகளுடன் எதிரி பேசிக்கொள்ளாலாம் என சொன்னதன் பேரில் நானும் ஒ.ப்புக்கொண்டேன். மேற்படி உத்தரவின் பேரில் எதிரி

என் பிள்ளைகளுடன் போனில் பேரும்போது என்னை பற்றி அவதூறாகவும் நான் எங்கு சென்று வருகிறேன் வீட்டிற்கு யார் யார் வருகிறார் என்பது போன்ற கேள்விகளை கேட்டுள்ளார். கடந்த 23.06.2024 ம் தேதி அன்று மதியம் 03.00 மணியளவில் நானும் எனது இரண்டு மகன்களும் என் தங்கை அழகு நித்யாவின் மகனான சந்தோஸ் என்பவரும் என் அப்பாவீட்டு மாடியில் இருந்த போது என் தங்கை அழகு நித்யா எனது அப்பாவின் வீட்டு கீழ் தளத்தில் இருந்தார். எனது அம்மா மல்லிகா எங்கள் வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தார். அப்ே◌போது அங்கு வந்த ஆஜர் எதிரி எங்கள் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தே எனது அம்மாவை பார்த்து தேவுடியா உன்னை அடித்தால் சரியாவரும் என்று சொல்லி தன்கையில் வைத்திருந்த அருவாளை வைத்து எனது அம்மாவை தலையில் வெட்டிவிட்டார். அதை பார்த்த நாங்கள் கீழே இறங்கி வருவதற்குள் என் அம்மாவை கீழே தள்ளி முதுகிலும் வெட்டி விட்டார். என்தங்கை அழகு நித்யா தடுக்க முற்பட்டபோது எதிரி அருவாளை வைத்து வெட்டியதில் என்தங்கையின் வலது கை விரலிலும் இடது கையிலும் வெட்டி காயத்தை ஏற்படுத்திவிட்டார். என்னை வலது தோள்பட்டையிலும் வலது முழங்கையிலும் வெட்டி காயத்தை ஏற்படுத்திவிட்டார். சாட்சி தனது வலது முன்னங்கையில் உள்ள காயத்தழும்பை காட்டுகிறார். அதை பார்த்த அருகில் வசிக்கும் பிரபாகரன் ◌்என்பவர் அங்கு வந்து எதிரியை கட்டி பிடித்து கொண்டார். எதிரி என்னையும் , எனது அம்மா, தங்கையின் முடியை பிடித்து இழுத்தார். எதிரியிடம் இருந்த வெளியேற முடியாமல் மள்ளுகட்டும் போது ஆஜர் எதிரி கிழே விழுந்ததில் கிழே கிடந்த ஜல்லி கல் குத்தி எதிரிக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தில் காயம் ஏற்பட்ட எங்களை தனியார் வாகனமூலம் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மருத்துவமனைக்கு வந்த போலிசார் என்னை விசாரித்த போது நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். அதில் இந்திராணி சாட்சியாக

கையொப்பம் செய்தார். எனக்கு மருத்துவமனையில் முன்னங்கையில் தையல் போடப்பட்டது. மேற்படி சம்பவத்தால் எனது தங்கைக்கு ஏற்பட்ட காயத்திற்கும் தையல் போடப்பட்டது. மேற்படி சம்பவத்தால் எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு தலையில் இரண்டு இடங்களிலும் முதுகில் இரண்டு இட்ங்களிலும் தையல் போடப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அருவாளை வைத்து தான் ஆஜர் எதிரி எங்களை தாக்கினார். அந்த அருவாள் **அ.சா.பொ. 1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி எனது கணவர் என்றால் சரிதான். மதுரையில் உள்ள தனியார் லாரியில் எதிரி டிரைவராக வேலை செய்து வருகிறார் என்றால் டிரைவராகவேலை செய்து வருவது தெரியும். எங்குவேலை செய்கிறார் என்றால் தெரியாது. ஓட்டுநர் என்பதால் ஆள்இந்தியா பெர்மிட் உள்ளதால் இந்தியா முழுவதும் லாரி ஓட்டி சென்றுவருவார் என்றால் சரிதான். மாதத்தில் 3, 4 நாட்கள் தான் ஊருக்கு வருவார் என்றால் ஞாபகமில்லை. சம்பவத்திற்கு 6 வருட்த்திற்கு முன்பிருந்தே எதிரி என்னிமிருந்து பிரிந்து எனது விட்டில் இருந்து மேற்கே 4 வீடு தள்ளியுள்ள அவர் பெற்றோர் வீட்டிற்கு வந்து போவார் என்றால் சரிதான். எதிரி இல்லாத போது வெளியூருக்கு செல்லும் போது நான் ஆண்டிச்சாமி என்ற போலிஸ் காவலருடன் கள்ள உறவு வைத்து வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி போலிஸ் காவலர் மற்றும் எனக்கு எதிராக எதிரி மானாமதுரை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு எதிரி கொடுத்திருந்தார் என்றால் ஆமாம். அதில் விசாரணை நடந்தது என்றால் ஆமாம். அந்த விசாரணையில் குற்றம் நிருபணம் செய்யப்பட்டாதால் போலிஸ் காவலர் ஆண்டிச்சா்மியை நீலகிரி மாவட்டத்திற்கு பணிமாற்றம் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு பணிமாற்றம் செய்யப்பட்ட பின்பும் அவர் நாளது தேதிவரை அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து என்னுடன் தவறான முறையில் பழகி வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனது மகனான பார்த்த சாராதி கபாடி விளையாட்டின் போது தாக்கப்பட்டு காயம் பட்டதில் அது

சம்பந்தமாக பார்த்த சாரதி அவரை தாக்கியவர்கள் மீது திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் பார்த்த சாரதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருப்புவனம் அரசு மருத்துவமனையிலும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்க பட்டது என்றால் சரிதான். பார்த்த சாரதி புகார் கொடுக்கும் சமயமும் சிகிச்சை எடுத்து கொள்ளும் போது காவலர் ஆண்டிச்சாமி பார்த்தசாரதியுடன் உதவிக்கு இருந்தார் என்றால் சரியல்ல. பார்த்த சாரதி அடிபட்டது சம்பந்தமாக ஆஜர் எதிரிக்கு நாங்கள் எந்த தகவலும் கொடுக்க வில்லை என்றால் சரிதான். வெளிமாநிலத்தில் இருந்த எதிரிக்கு பார்த்த சாரதி அடிப்பட்ட விபரம் மற்றவர்கள் மூலம் தெரிந்து எதிரி பார்த்த சாரதிக்கு செல்போன் மூலம் அழைத்து நல விசாரித்ததோடு எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு எனக்கு ஏன் தகவல் கொடுக்கவில்லை என்வும் பார்த்த சாரதிக்கு நான் தகப்பனரா, ஆண்டிச்சாமி தகப்பனாரா கேட்டார் என்றும் அதை நான் ஆண்டிச்சாமிக்கு தெரிவித்து அதனால் ஆண்டிச்சாமி விரோதமாக இருந்தார் என்றால் சரியல்ல. எனது தங்கை அழகு நித்யா எனது அம்மா வீட்டில் இருந்து 3 வீடுகள் தள்ளி தெருவின் எதிர் திசையில் அவருக்கு உள்ள வீட்டில் குடும்பத்துடன் வசிக்கிறார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது எனது அம்மா கீழ் வீட்டில் இருந்ததாகவும் நானும் எனது தங்கையும் எனது அம்மாவீட்டு மாடியில் வசித்து வந்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் அச்சமயம் இருந்ததாக சொல்லியுள்ளேன் . எ்ன் தங்கை எனது அம்மாவீட்டில் வசிக்கவில்லை. சம்பவ சமயம் மட்டும் தான் அங்கிருந்தார். எதிரி எனது அம்மாவீட்டிற்கு சம்பவ தினம் வந்தபோது எனது அம்மா அவர் வீட்டிற்கு வெளியே நின்றார். எனது தங்கை கீழ் தளத்தில் இருந்தார். என்னை போலிசார் விசாரித்த போது நானும் எனது தங்கையும் அப்போது மாடியில் இருந்ததாகவும் எனது அம்மா மட்டும் கீழ் தளத்தில் வாசலில் நின்றார் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனது அம்மாவை வீட்டுக்குள் வைத்து வெட்டினாரா அல்லது வெளியில் வைத்து வெட்டினாரா என்றால் வீட்டின் வாசல் படியில் வைத்து தான் வெட்டினார். மாடியில் நின்று பார்த்தால் வாசல் படியில் நடப்பது தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவின் அலறல் சத்தம்

கேட்டுதான் நானும் எனது தங்கையும் கிழேவந்தோம்  என்றால் அலறல் சத்தம் கேட்டு தான் வந்தோம். போலிசார் விசாரிக்கும் போது எனது அம்மாவின் அலறல் சத்தம் கேட்டு மாடியில் இருந்து தங்கையும் நானும் வந்தோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கீழே இறங்கி வந்து பார்க்கும் போது எனது அம்மா மயங்கி கிழே விழுந்து கிடந்தாரா என்றால் இல்லை. வெட்டும்போது பார்த்து ஓடி வந்தேன். நான் மாடியில் இருந்து இறங்கி வருவதற்கு முன்பாகவே என் தங்கைக்கும் வெட்டு விழுந்து விட்டது என்றால் சரிதான். நான் மாடியில் இருந்து இறங்கி வந்தபோது என்னுடன் எனது மகன் பார்த்த சாரதியும் எனது தங்கை மகன் சந்தோஸ் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் இந்த வழக்கு சம்பவம் தெரியுமா என்றால் தெரியும். நான் மாடியில் இருந்து வந்தபோது பார்த்த சாரதியும் சந்தோ்ஸ் வந்தார்கள் என போலிசார் விசாரணையில் சொன்னோ என்றால் சொன்னேன். எனது தங்கை வெட்டுபட்டதற்கு பின்பு தான் எனக்கு வெட்டு விழுந்தது என்றால் சரிதான். எனக்கோ எனது தங்கைக்கோ வெட்டுவிழும்போது பார்த்த சாரதியோ சந்தோஸ் தடுக்கவில்லை என்றால் அருகில் வரவில்லை. அவர்கள் இருவரும் எதிரியை தாக்கவோ , எதிரியின் கையில் இருந்த அருவாளை பறிக்கவோ இல்லை என்றால் சரிதான். என்னை வெட்டி எவ்வளவு நேரம் கழித்து பிரபாகரன் வந்தா் என்றால் 10 நிமிடம் கழித்து வந்தார். பிரபாகரன் வரும் போது எதிரி அங்கிருந்த ஓடினாரா என்றால் ஓடவில்லை அருவாளை எங்கள்மீது எரிய முற்பட்ட போது நானும் எனது அம்மாவும் அந்த அருவாளை தடுத்து பிடித்து கொண்டபோது பிரபாகரன் வந்தார். அந்த அருவாளை எதிரி எடுத்துகொண்டு ஓடிவிட்டாரா என்றால் எதிரியிடம் இருந்து நானும் எனது அம்மாவும் பிடுங்கி கிழே போட்டோம்.பிரபாகரன் எதிரியை கட்டி பிடித்து கொண்டதாகவும் நானும் எனது அம்மாவும் அருவாளை பிடுங்கி கிழே போட்டதாகவும் போலிசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் அரை மணிநேரம் நடந்தது. அப்போது சுமார் 40, 50 பேர் அங்கு கூட்டமாக இருந்தார்க்ள். அங்கிருந்த 40, 50 பேர் எதிரியை பிடிக்க முயற்ச்சித்தார்களா என்றால் அவர் அருவாளை கையில் வைத்திருந்ததால் எதிரியை அவர்கள் பிடிக்க

முயற்சிக்கவில்லை. அருவாளை நாங்கள் பறித்த பிறகும் எதிரியை பிடிக்க வில்லை. எங்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பதில் உதவியாக இருந்தார்கள். நாங்கள் திருப்புவனம் சென்றவுட்ன் நானும் எனது அம்மாவும் மருத்துவமனைக்கு சென்றோம். எனது தங்கை திருப்புவனம் காவல்நிலையத்திற்கு சென்று அங்கு அவர் புகார் கொடுத்தாரா என்றால் என் தங்கை திருப்புவனம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் சொன்னார் . என் தங்கைக்கு கையில் காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு செல்ல சொல்லியுள்ளார்கள். என் தங்கை சொன்ன புகாரை போலிசார் எழுதிக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருப்புவனம் காவல்நிலையத்திற்கு எதிரே தான் திருப்புவன் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரியல்ல. 200 மீ இடைவெளி இருக்கும். திருப்புவனம் அரசு மருத்துவமனையில் நாங்கள் இருந்தபோதும் என் தங்கை திருப்புவனம் காவல்நிலையத்திற்கு சென்ற போதும் எதிரி அங்கு இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது .எதிரிதான் அவருக்கு ஏற்பட்ட காயம் சம்பந்தமாக எங்கள் மீது முதலில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. திருப்புவனம் மருத்துவமனையில் இருந்து எங்களை மதுரையில் உள்ள அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு தான் செல்ல சொன்னார்க்ள் என்றால் சரிதான். என் அம்மா இருதய நோயாளி என்பதால் நான் தான் வேலம்மாள் மருத்துவமனைக் கு அழைத்து சென்றேன். நான் சொல்வது போல் எதிரி என் அம்மாவீட்டிற்கு வரவில்லை என்றாலும் அங்கு வைத்து எங்கள் மூவரையும் அ.சா.பொ.1 அருவாளை வைத்து எதிரி வெட்டவில்லை என்றாலும் அப்போது பிரபாகரன் அந்த இடத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி வெளி மாநிலத்திற்கு ஓட்டுநராக சென்று விட்டு ஓய்விற்காக செல்லப்பனேந்தலில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் படுத்து தூங்கி கொண்டிருந்தபோது நானும் எனது அம்மா, தங்கை, எனது மகன் பார்த்த சாரதி , எனது தங்கை மகன் சந்தோஸ் ஆகியோர் அத்துமீறி அந்த விட்டில் நுழைந்து சந்தோஸ் , பார்த்த சாரதியும் கையில் கத்தியுடன் நாங்கள் மூவரும் கம்புடனும் எதிரியை தாக்கி காயப்படுத்தினோம் என்றாலும் அது சம்பந்தமாக எங்கள் 5 வர் மீது ம் எதிரி திருப்புவனம் காவல்நிலையத்தில் முதன் முதலில் புகார் கொடுத்து அதன் பெயரில் எதிரியை போலிசார் மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தார்கள் என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்த புகார் மனு மறைக்க பட்டு ஆண்டிச்சாமி ஆலோசனை பெயரில் அ.சா.ஆ. 1 புகார் பின்னிட்டு பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 புகார் மனு நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் தான் எழுதினேன். சாட்சி கையொப்பம் செய்த இந்திராணிக்கு சம்பவம் தெரியுமா என்றால் தெரியும். இந்திராணிக்கு சம்பவம் தெரியும் என புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. நான் சொல்வது போன்று எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும் எதிரி எங்களை தாக்கவில்லை என்றாலும் அ.சா.பொ. 1 எதிரியின் அருவாள் இல்லை என்றும் அதை வைத்து எதிரி எங்களை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.17 18:38:17 +0000

**Chief Judicial Magistrate**

Sivagangai